**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.02/2025**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் திங்கள் கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மகேஷ் | த/பெ.: | காத்தமுத்து |
| கிராமம்: | மணலி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | ஆட்டோ ஓட்டுநர் |
| வயது: | 36 | முகவரி: | மணலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 01.09.2025.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 09.09.2024ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 09.09.2024ம் தேதியிட்ட குடும்ப பாகப்பிரிவினை பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். 26.11.2024–ல் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 17.12.2024–ல் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகும். எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.5** ஆகும். 29.12.2018–ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆகும். நில உரிமை விவரம் கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

<u>**வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.